இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 14-06-2025

# பா.ஜ.க. அரசின் 11 மெகா தவறுகள்!

**இந்திய நாட்டை 11 ஆண்டுகளாக ஆண்டு, 12 ஆவது ஆண்டில் அடியெடுத்து வைத்திருக்கிறது பா.ஜ.க. அரசு. இதில் கொண்டாடிக் கொள்ள ஏதுமில்லை. இந்திய நாட்டை பின்னோக்கிய பாதையில் மிக வேகமாக அழைத்துச் செல்வது தான் பா.ஜ.க. அரசின் சாதனைகள் ஆகும். அனைத்து வகைகளிலும் இந்திய நாட்டின் கட்டமைப்பைச் சிதைக்கும் செயலையே ஒன்றிய பா.ஜ.க. அரசு கடந்த 11 ஆண்டுகளாகப் பார்த்துள்ளது என்ற வேதனையைத் தான் பதிவு செய்ய வேண்டியதாக இருக்கிறது.**

1. அச்சமற்ற ஆட்சியை பா.ஜ.க. தரவில்லை. மக்கள் ஒரு ஆட்சியிடம் எதிர்பார்ப்பது அமைதியான சூழல்தான். ஆனால் அதனை பா.ஜ.க. அரசு வழங்கவில்லை. எல்லோரையும், எல்லாக் காலத்திலும் பதற்றத்தோடு வைத்துள்ளது பா.ஜ.க. அரசு. எப்போது என்ன செய்வார்களோ என்ற அச்ச சூழலே இந்த 11 ஆண்டுகளாக இந்திய நாட்டில் நிலவுகிறது.
2. அரசியலமைப்புச் சட்டம்தான் இந்திய நாட்டின் பாதுகாப்பு ஆகும். இந்த நாட்டை இத்தனை ஆண்டுகள் வழிநடத்துவதும் அதுதான். அந்தச் சட்டத்தைச் சிதைக்கும் செயலை சிறுகச்சிறுகச் செய்து வருகிறார்கள். அனைவருக்கும் பொதுவானது நாடு, அனைவருக்கும் பொதுவானது சட்டம், அனைவரது எண்ணங்களுக்கும் விருப்பமானது இந்த நாடு, அனைவரது விருப்பங்களையும் நிறைவேற்றும் கடமை ஒன்றிய அரசுக்கு உண்டு. ஆனால் அதனைச் செய்யவில்லை பா.ஜ.க. ஆட்சி. 'ஒற்றை மதம், ஒற்றை மொழி, ஒற்றைப் பண்பாடு' கொண்டதாக ஆட்சியை நடத்தி, அத்தகைய நாடாக இந்தியாவை மாற்ற முயற்சிக்கிறார்கள்.
3. இந்தியா என்பது கூட்டாட்சி நாடு. பல்வேறு மாநிலங்களில் இருக்கும் மாநில அரசுகளை அரவணைத்து கூட்டாட்சித் தன்மையுடன் இந்திய நாட்டை நடத்த வேண்டும். ஆனால் பிரதமர் நரேந்திரமோடி, இந்திய நாட்டை ஒற்றையாட்சி நாடாக மாற்றப் பார்க்கிறார். மாநிலங்களை மதிப்பது இல்லை. மாநில அரசுகளுடன் உரையாடுவது இல்லை. கலந்தாலோசனை செய்வது இல்லை. பா.ஜ.க. நினைப்பதை, பல நேரங்களில் தான் நினைப்பதை மட்டும் செயல்படுத்தும் ஆட்சியாக ஒன்றிய அரசை மாற்றி விட்டார்.
4. அவர்களது சாதனையாகச் சொல்லப்படுவது காஷ்மீருக்கான சிறப்புத் தகுதி பறிக்கப்பட்டது, காஷ்மீரின் மாநிலத் தகுதியைப் பறித்தது, முத்தலாக் சட்டம், குடியுரிமைச் சட்டம், பொதுசிவில் சட்டம் ஆகியவை ஆகும். இவை அனைத்தும் சிறுபான்மை இனத்தின் மீதான தாக்குதல்களே தவிர வேறல்ல. பா.ஜ.க.வும், அதன் மூதாதை அமைப்பும் என்ன மறைமுக நோக்கத்துக்காகச்செயல்படுகிறதோஅதைமட்டும்செய்துகொண்டார்களே தவிர வேறல்ல.
5. **பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் சிறுபான்மையினர் மீதான தாக்குதல் என்பது இயல்பான நடவடிக்கையாக மாறிவிட்டது. வெறுப்புப் பேச்சுகள் பேசுவது நாளுக்குநாள் அதிகமாகி வருகிறது. வெறுப்புப் பேச்சுகள் சட்டபூர்வமானதாக ஆகிவிட்டன. வன்முறையைத் தூண்டுவதற்காக வெறுப்புப் பேச்சுகள் பேசப்படுகின்றன. வன்முறைகள் அவர்களால் வரவேற்கப்படுகின்றன. வன்முறைக் குற்றங்களில் கைது செய்யப்பட்ட, தண்டனை பெற்றவர்கள் அறமற்ற வழியில் விடுதலை செய்யப்படுகிறார்கள்.**
6. **காங்கிரஸ் அரசைப் பார்த்து, மன்மோகன்சிங்கைப் பார்த்து உலக நாடுகள் பயப்படவில்லை என்பதைத்தான் 2014 தேர்தல் பரப்புரையில் மோடி சொன்னார். ஆனால் இன்று உலக நாடுகளின் மரியாதையை வாங்கிக் கொடுத்து விட்டாரா என்றால் இல்லை. இந்தியப் பொருட்களுக்கு அநியாய வரி போடுகிறது அமெரிக்கா. இந்தியர்களை விலங்கு மாட்டி அனுப்புகிறது அமெரிக்கா. இந்திய எல்லைக்குள் புகுந்து வீடுகட்டிவிட்டது சீனா. இந்தியப் பகுதிக்கு தனது மொழிப் பெயரை வைக்கிறது சீனா. இந்திய மீனவர்களை தினந்தோறும் கைது செய்கிறது இலங்கை. இந்தியாவுக்குள் பயங்கரவாதிகளை அனுப்பி வைக்கிறது பாகிஸ்தான். பெரிய நாடு முதல் சுண்டைக்காய் நாடுகள் வரை மதிக்கிறதா பா.ஜ.க. அரசை? பிரதமர் போகாத நாடில்லை, நாளில்லை. ஆனால் மரியாதை இல்லை.**
7. பாதுகாப்புத் துறையை நவீனமயம் ஆக்கியது தனது சாதனை என்று சொல்கிறார் பிரதமர் அவர்கள். பதான்கோட் தாக்குதலில் 7 வீரர்கள் பலி, பொம்பொரியில் எட்டு ராணுவ வீரர்கள் பலி, உரித் தாக்குதலில் 19 படைவீரர்கள் பலி, அமர்நாத் கோவில் தாக்குதலில் ஏழு பேர் பலி, லெத்திபோரா கமாண்டோ பயிற்சி நிலையத் தாக்குதலில் 5 பாதுகாப்பு வீரர்கள் பலி, புல்வாமா தாக்குதலில் 40 படைவீரர்கள் பலி, இரஜோரி ராணுவ முகாம் தாக்குதலில் 3 ராணுவ வீரர்கள் பலி, ஷோபியான் பகுதியில் நடந்த தாக்குதலில் 2 பேர் பலி, பகல்காம் தாக்குதலில் 22 பேர் பலி - இதுதான் பா.ஜ.க. அரசின் சாதனைப் பட்டியல் ஆகும். இந்திய நாட்டின் பாதுகாப்பு கேள்விக் குறியாக ஆகி வருகிறது. ஆனால் பாதுகாப்புக்கான நிதி மட்டும் லட்சம் கோடிகளாக ஆகிக் கொண்டு இருக்கின்றது.
8. பொருளாதார முன்னேற்றம்தான் அதிகமாக அவர்களால் பேசப்படுகிறது. ஆனால் உண்மை அப்படி இல்லை. இந்தியப் பொருளாதாரம் குறித்த தனது மதிப்பீடுகளை உலக வங்கி தொடர்ந்து குறைத்து வருகிறது. 6.7 விழுக்காடு வளர்ச்சி என்று ஆறு மாதத்துக்கு முன்பு சொன்னது உலக வங்கி. அதனை 6.3 ஆக சில நாட்களுக்கு முன் குறைத்துவிட்டது. அடுத்த ஆண்டு 6.2 ஆக இருக்கும் என்றும் சொல்லி இருக்கிறது.
9. இது கார்ப்பரேட் கம்பெனிகளுக்கான அரசாங்கம் ஆகும். சலுகைகள் அனைத்தையும் கார்ப்பரேட் நிறுவனங்களுக்குத் தந்து அவர்களைக் காப்பாற்றும் காரியத்தை வெளிப்படையாகச் செய்து வருகிறார்கள். பொதுத் துறை நிறுவனங்களை மூடுவதும், அதனைத் தனியாருக்கு விற்பதும் தான் இவர்களுக்குத் தெரிந்த ஒரே வழி. லட்சம் கோடிகளை கார்ப்பரேட் கம்பெனிகளுக்கு கடனாய்க் கொடுப்பதும், வசூலிக்க முடியவில்லை என்று சொல்லி வாராக்கடனாக மாற்றி அதனை ரத்து செய்வதும் என, இத்தகைய புது வகையான நிதிமோசடிதான் இவர்களது பொருளாதாரக் கொள்கை ஆகும். வங்கி மோசடிகள் வழக்கமானவை ஆகிவிட்டது. மோசடியாளர்களை வெளிநாட்டுக்கு இவர்களே தப்ப வைப்பார்கள்.
10. மக்கள் குறித்த எந்தக் கவலையும் இல்லை. 500, 1000 ரூபாய் நோட்டுகளை தடை செய்து தவிக்க விட்டார்கள். கொரோனா காலத்தில், பொது முடக்கம் என்று சொல்லி ஊரைப் பூட்டிவிட்டு, அப்பாவி மக்கள் மீது செயற்கைப் பேரிடரை உருவாக்கினார்கள். மூன்று வேளாண் சட்டங்களுக்கு எதிராக இரண்டாண்டு காலம் வெயிலிலும் மழையிலும் போராடினார்கள். 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் இறந்தார்கள். அவர்களைப் பற்றி எள்ளளவும் கவலைப்படவில்லை பா.ஜ.க. அரசு. மணிப்பூரில் இரண்டு ஆண்டுகளாக நடைபெற்று வரும் வன்முறையில் பாதிக்கப்பட்டது அப்பாவி மக்கள்தான். அவர்களைக் காக்க நடவடிக்கைகள் இல்லை. பெட்ரோல், டீசல் விலை உயர்வும், சிலிண்டர் விலை உயர்வும் அடித்தட்டு மக்களுக்குக் கொடுத்து வரும் அன்றாடத் தொல்லைகள்.
11. **தமிழ்நாட்டுக்கு அவர்கள் தந்து வரும் தொல்லைகள், எத்தனை ஆண்டுகள் ஆனாலும் மன்னிக்க முடியாதவை ஆகும்.**

மாவட்ட எல்லையிலிருந்து 11 கி.மீட்டர் தூரம் சாலையின் இருபுறங்களிலும் மக்கள் திரண்டு மகிழ்ச்சி ஆரவாரம்!

# சேலம் மாவட்டத்தில் - முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு வரலாறு காணா வரவேற்பு!

## வழிநெடுக மக்களைச் சந்தித்து மகிழ்ந்தார் திராவிட நாயகர்!

**சென்னை, ஜுன் 14-**

**முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை சேலம் மாவட்ட எல்லையில் மக்கள் திரண்டு கோலாகலமாக வரவேற்றனர். சேலம் மாவட்டம் வரலாறு காணா வகையில் மாவட்ட எல்லையிலிருந்து 11 கிலோ மீட்டர் தூரம் சாலையின் இருபுறங்களிலும் மக்கள் திரண்டு மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். மாலை 5.30 முதல் இரவு 10.30 மணி வரை வழிநெடுக மக்களைச் சந்தித்து மகிழ்ந்தார் திராவிட நாயகர் !**

**பெண்களும், இளைஞர்களும் வழிநெடுகிலும் செல்பி எடுத்து உற்சாகத்துடன் வாழ்த்து முழக்கங்கள் எழுப்பினர்! நேற்று முன்தினம் மேட்டூர் அணையில் டெல்டா பாசன சாகுபடிக்காக தண்ணீரை திறந்து விட்டார்!**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஈரோடு, சேலம் மாவட்டங்களில் 2 நாட்கள் சுற்றுப்பயணம் மேற்கொண்டு கள ஆய்வு பணியில் ஈடுபட்டு வருகிறார்கள். புதன் அன்று காலை விமானத்தின் மூலம் கோவை வழியாக ஈரோடு பயணம்மேற்கொண்டார். ஈரோடு மாவட்ட களஆய்வு பணியை முடித்து மாலையில் சேலம் வருகை தந்த போது சேலம் மாவட்ட எல்லையான பெரும்பள்ளத்தில் மக்கள் திரண்டு முதலமைச்சர் அவர்களுக்கு பிரமாண்டமான முறையில் வரவேற்பு அளித்தனர்.

அங்கிருந்து 11 கிலோ மீட்டர் தூரம் சாலையின் இருபக்கங்களிலும் அலையென மக்கள் திரண்டு நின்றனர், மக்கள் வெள்ளத்தில் மிதந்தபடியே முதலமைச்சர் அவர்கள் உற்சாகத்துடன் பயணம் சென்றார். முதலமைச்சர் அவர்களை கண்ட மக்கள் முதலமைச்சர் வாழ்க! முதலமைச்சர் வாழ்க! என வாழ்த்து முழக்கங்களை எழுப்பி முதலமைச்சர் அவர்களை வரவேற்றனர். வழி எங்கும் முதலமைச்சருடன் பெண்களும், இளைஞர்களும் செல்பி எடுத்து மகிழ்ந்தனர்.

தொடர்ந்து மக்கள் சாலையின் இரு புறமும் ஆண்கள், பெண்கள், சிறுவர் சிறுமிகள் என ஏராளமானவர்கள் திரண்டு நின்றனர். அவர்களை கண்டதும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் காரில் இருந்து இறங்கி மக்களைச் சந்தித்தார். மக்கள் முதலமைச்சர் அவர்களுடன் கை குலுக்கிய படி முதலமைச்சர் வாழ்க! என வாழ்த்தி வரவேற்று மகிழ்ந்தனர்.

### செல்பி எடுத்து மகிழ்ச்சி!

அப்போது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அவ்வப்போது மக்களுடன் மகிழ்ச்சி பொங்க உரையாடினார். மேலும், இளைஞர்கள், இளம் பெண்கள் முதலமைச்சருடன் செல்பி எடுத்து மகிழ்ந்தனர். பெண்கள் சிலர் கைக்குழந்தைகளுடன் நின்றதைப் பார்த்த முதலமைச்சர், அந்த பகுதிக்குச் சென்று குழந்தைகளை வாங்கி கொஞ்சி மகிழ்ந்தார். பொதுமக்களுடன் வழிநெடுகிலும் கழகத் தொண்டர்கள் கொடுத்த மனுக்கள், புத்தகங்கள் பொன்னாடைகள் ஆகியவற்றையும் வாங்கியபடியே முதலமைச்சர் அவர்கள் நடந்து சென்றார்கள்.

சேலம் மாவட்டம் மேட்டூர் அணை பகுதியில் முதல்வர் அவர்களை கண்டதும் அங்கு திரண்டிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் உற்சாகத்துடன் வரவேற்றனர்.

வழிநெடுக திரண்டிருந்தமக்கள்முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அற்புதமாக ஆட்சி செய்கிறார்கள். கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், புதுமைப்பெண் திட்டம், தமிழ்ப் புதல்வன் திட்டம் முதலான அருமையான திட்டங்களால் நாங்கள் முதலமைச்சர் அவர்களை மனதார பாராட்டுகிறோம் என்றனர். இதுவரை வேறு கட்சிக்கு வாக்களித்திருந்தாலும், முதலமைச்சர் அவர்களின் திட்டங்களால் பயனடைய கூடிய வாய்ப்பை பெற்றுள்ள நாங்கள் இனி என்றும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கே எங்களுடைய ஆதரவை அளிப்போம் என்று பெருமிதத்துடன் கூறிய காட்சிகளை கண்டு எல்லோரும் வியந்தனர்.

நேற்று முன்தினம் காலை தொடர்ந்து மேட்டூர் அணையிலிருந்துடெல்டா பாசனத்திற்கு முதலமைச்சர் அவர்கள் காவிரி ஆற்றில் தண்ணீரை திறந்து விட்டு மலர்தூவி மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள். அப்பொழுது அங்கே நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ. வேலு, சுற்றுலாத் துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் ஆகியோரும் மூத்த தலைவர்களும் அரசு அலுவலர்களும் பொதுமக்களும் திரண்டு இருந்தனர்.

திராவிட நாயகர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற இரண்டாம் ஆண்டு முதல் மேட்டூர் அணை பாசனத்திற்காக திறந்து விடப்பட்டு டெல்டா பகுதியில் சிறந்த முறையில் சாகுபடி பணிகள் நடைபெற்றன.

2021 ஆம் ஆண்டில் ஜுன் 12 ஆம் நாளன்றும் 2022 ஆம் ஆண்டில் வரலாற்றில் முதன்முறையாக முன் கூட்டியே மே 24 ஆம் நாளன்றும் 2023 ஆம் ஆண்டில் ஜுன் 12 ஆம் நாளன்றும் இந்த 2025 ஆம் ஆண்டிலும் ஜுன் 12 ஆம் நாளன்றும் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

வாரிய அனைத்து பகுதி அலுவலகங்களில் இன்று

# சென்னைக் குடிநீர் வாரியம் சார்பில் குறை தீர்க்கும் கூட்டம்!

*சென்னை, ஜுன் 14-*

*சென்னைக் குடிநீர் வாரியம் சார்பில், குறை தீர்க்கும் கூட்டங்கள் இரண்டாவது சனிக்கிழமைகளில் நடத்தப்பட்டு வருகிறது. இம்மாதத்திற்கான குறை தீர்க்கும் கூட்டம் இன்று 14.06.2025 (சனிக்கிழமை) காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை குடிநீர் வாரிய அனைத்து பகுதி அலுவலகங்களில் நடைபெறும்.*

*இந்த குறை தீர்க்கும் கூட்டம் நடைபெறும் பகுதி அலுவலகங்கள் விபரம்:*

*பகுதி அலுவலகம்-1 - திருவொற்றியூர், பகுதி அலுவலகம்-2 - மணலி, பகுதி அலுவலகம்-3 - மாதவரம், பகுதி அலுவலகம்-4 - தண்டையார்பேட்டை, பகுதி அலுவலகம்-5 - இராயபுரம், பகுதி அலுவலகம்-6 - திரு.வி.க.நகர், பகுதி அலுவலகம்-7 - அம்பத்தூர், பகுதி அலுவலகம்-8 - அண்ணா நகர், பகுதி அலுவலகம்-9 - தேனாம்பேட்டை, பகுதி அலுவலகம்-10 - கோடம்பாக்கம், பகுதி அலுவலகம்-11 - வளசரவாக்கம், பகுதி அலுவலகம்-12 - ஆலந்தூர், பகுதி அலுவலகம்-13 - அடையாறு, பகுதி அலுவலகம்-14 - பெருங்குடி, பகுதி அலுவலகம்-15 - சோழிங்கநல்லூர்,*

*இந்த குறை தீர்க்கும் கூட்டங்கள் வாயிலாக பொதுமக்கள் பயன்பெற வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு பகுதி அலுவலகங்களிலும் ஒரு மேற்பார்வைப் பொறியாளர் தலைமையில் இக்கூட்டம் நடைபெறும். எனவே, இந்த குறை தீர்க்கும் கூட்டத்தில் பொதுமக்கள் பங்கேற்று குடிநீர், கழிவுநீர் சம்பந்தப்பட்ட பிரச்சனைகள், குடிநீர், கழிவுநீர் வரி மற்றும் கட்டணங்கள், நிலுவையில் உள்ள குடிநீர், கழிவுநீர் புதிய இணைப்புகள் தொடர்பான சந்தேகங்களை நேரில் மனுக்கள் வாயிலாக தெரிவித்து பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும், மழைநீர் சேகரிப்பு மற்றும் பராமரிப்பு தொடர்பான விளக்கங்களையும் இக்கூட்டத்தின் வாயிலாக தெரிந்து கொள்ளலாம்.*

*இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.*

# தொன்மத்துக்கு ஒரு நீதி - தொன்மைக்கு ஒரு நீதியா?

## கவிப்பேரரசு வைரமுத்து சாடல்!



ஒன்றிய அமைச்சர்
ஷெகாவத் அவர்கள்
கீழடித் தொன்மையை மெய்ப்பிக்க
இன்னும் அறிவியல் தரவுகள்
தேவையென்று சொல்லித்
தமிழர் பெருமைகளைத்
தள்ளி வைக்கிறார்

ஒரு தமிழ்க் குடிமகனாக
அமைச்சர் அவர்களுக்கு
எங்கள் அறிவின் வலியைப்
புலப்படுத்துகிறேன்

கீழடியின் தொன்மைக்கான
கரிமச் சோதனைகள்
இந்தியச் சோதனைச் சாலையில்
முடிவு செய்யப்பட்டவை அல்ல;
அமெரிக்காவில் ஃபுளோரிடாவின்
நடுநிலையான
சோதனைச் சாலையில்
சோதித்து முடிவறியப்பட்டவை

அதனினும் சிறந்த
அறிவியல் தரவு என்று
அமைச்சர் எதனைக் கருதுகிறார்?

சில தரவுகள்
அறிவியலின்பாற் பட்டவை;
சில தரவுகள்
நம்பிக்கையின்பாற் பட்டவை

ராமர் என்பது ஒரு தொன்மம்
அதற்கு அறிவியல்
ஆதாரங்கள் இல்லை;
நம்பிக்கையே அடிப்படை

கீழடியின் தொன்மை என்பதற்கு
அறிவியலே அடிப்படை

ராமரின் தொன்மத்தை
ஏற்றுக்கொண்டவர்கள்
கீழடியின் தொன்மையை
ஏற்றுக்கொள்ளாதது
என்ன நியாயம்?
தொன்மத்துக்கு ஒரு நீதி
தொன்மைக்கு ஒரு நீதியா?
தமிழர்களின் நெஞ்சம்
கொதிநிலையில் இருக்கிறது

தமிழ் இனத்தின் தொன்மையை
இந்தியாவின் தொன்மையென்று
கொண்டாடிக் கொள்வதிலும்
எங்களுக்கு எந்த மறுப்பும் இல்லை

"தொன்று நிகழ்ந்த
தனைத்தும் உணர்ந்திடு
சூழ்கலை வாணர்களும் - இவள்
என்று பிறந்தவள் என்றுண ராத
இயல்பின ளாம் எங்கள் தாய்"
என்ற பாரதியார் பாட்டு
எங்கள் முதல் சான்றாக முன்நிற்கிறது

மேலும் பல தரவுகள்
சொல்வதற்கு உள்ளன

விரிக்கின் பெருகுமென்று
அஞ்சி விடுக்கிறோம்

அங்கீகார அறிவிப்பை
விரைவில்வெளியிடவேண்டுகிறோம்



கவிப்பேரரசு
வைரமுத்து